# புறநானூற்றில் காணலாகும் அறிவியல் கோட்பாடுகள்

முனைவர் சீ.மகேசுவரி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரி,
கரந்தை, தஞ்சாவூர்-2.
Email: magisara2011@gmail.com

79

**ஆய்வுச்சுருக்கம்**

உலகின் மிகத்தொன்மையான இனங்களில் பழமையான மொழிகளுள் இடையறுதலின்றி வாழும் ஒரே மொழி தமிழ் மொழியாகும்பண்டை நூல்களுள் ஆராய்ச்சிக்குரிய அறிவியல் கூறுகள் . .நாம் சங்கப் பாக்களை அறிவியல் கண்ணோடு பார்ப்பதில்லை .நிறைந்து காணப்படுகின்றன இலக்கியங்களில◌் உள்ள அறிவியல்தான் விஞ்ஞானிகளின் ஆய்வுக்கும் உறுதுணையாகின்றன . தொல்காப்பியம் சங்க இலக்கியமாம் பாட்டும் தொகையும் என அதன் நெடும் பரப்பில் காணப்படும் கடைச்சங்க காலத்தில் எழுந்த தமிழ் இலக்கியங்களில் உள்ள .அறிவியல் செய்திகள் ஏராளம் அறிவியல் சிந்தனைகள் போற்றற்பாலதுஅந்த வகையில் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான . புறநானூறு எனும் தமிழரின் வாழ்வியலை வெளிப்படுத்தும் காலக்கண்ணாடி நூல் உள்ள அறிவியல் .செய்திகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்

**திறவுச்சொற்கள்**

சேம அச்சு, காற்றில்லா, நளி கடல், கடுவெளி, வீசும்பே, நீத்தம், உழலும்.

**முன்னுரை**

கடைச்சங்க காலத்தில் எழுந்த தமிழ் இலக்கியங்களில் உள்ள அறிவியல் சிந்தனைகள் ஏராளம்இவ்வறிவியல் கோட்பாடுகளைக் கற்பனை என்றும் ., புனைவு என்றும், உவமை என்றும், மேம்படுத்தப்பட்ட செய்தி என்றும் நம்மவர்களே புறம் தள்ளுவதுதான் இன்றும் தமிழ் அறிவியலின் நிலைஆய்வகத்தில் மெய்ப்பிக்கப்பட்ட .ஆனால் ஆய்வாளனும் அவ்வாறே அவதானிக்க முடியாது . ஆய்வின் முடிவுகளுக்கு அடிப்படை காரணங்களாய் அமைவது, அதன் மாதிரி வடிவமே நம் தமிழ் மொழியின் இலக்கியங்கள் ஆகும்அண்மைக் கால அறிவியலின் வளர்ச்சியாக வெளிப்பட்ட . ய்வுகளுக்கஅனைத்து ஆ◌ும் மூலம் பழந்தமிழரின் வாழ்வியல் சார்ந்த அனுபவங்கள்அந்த . வகையில் பதினெண் மேற்கணக்கு நூல்களில் ஒன்றான புறநானூற்றில் காணப்படும் அறிவியல் .கோட்பாடுகளை ஒரு சில பாடல்கள் வழி விளக்க முற்படுகிறது இக்கட்டுரை

ஒரு பொருளை விளக்குவதற்கு உதவுவதே உவமைஎனவே ., உவமை என்பது தெரிந்த ஒன்றாக இருக்க வேண்டும்அப்பொழுது தான் அதனுடன் ஒப்புமையாகக் கூறப்படும் பொருள் . பேராசான் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே தமிழ் .அல்லது பொருள்கள் நமக்குப் புரியும் பெருமகனார் மக்கள் உவமை அணியில் சிறந்திருந்தமையால் தான் அச்சிறப்புமிகு அறிஞர், உவமஇயல் என அதற்கெனத் தனி இயலை வகுத்துள்ளார்எனவே ., அறிவியல் உண்மைகளை உவமையாகப் புலவர்கள் கையாண்டுள்ளனர் என்றால் இவ்வறிவியல் உண்மைகள் மக்கள் எளிதில் உண்மைகளாக விளங்கும் சிறப்பைப் பெற்றிருந்தன எனலாம்எளிய பொது மக்களிடையேலே . க் கிடந்தஅறிவியல் உண்மைகள் மண்டின எனில் தமிழர் அறிவியலின் ஆழம் அளக்கவியலாததாக

இருந்திருக்கிறது என்பதே உண்மை.

**சேம அச்சு**

ஊர்திகளுக்கான மாற்றுச் சக்கரத்தை )Stepney) என்கிறோம்இச்சொல் ஒரு தெருவின் . ) இங்கிலாந்திலுள்ள ஸ்டென்பி எனும் தெருவில் வால்டர் தேவீசு .பெயராகும்Walter Davis), தாம் )Tom) இருவரும் இம்மாற்றுச் சக்கரத்தை உருவாக்கித் தந்தனர்அத்தெருவின் பெயரே பின்னர் . .நிலைத்து விட்டது

ஆனால் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நம் தமிழ் முன்னோர்கள் மாற்றுச் சக்கரங்களின் தேவை உணர்ந்து அதை உருவாக்கியுள்ளனர் எனும் பொழுது அவர்களின் அறிவியல் அறிவின் ஆழத்தை நாம் அறிய முடியும் புறநானூற்றின் .102வது பாடல் இப்படிச் சொல்கிறது.

**எருதே இளைய; நுகம் உணராய**
**சகடம் பண்டம் பெரிது செய்தன்றே**
**அவல் இழியினும், மிசை ஏறினும்**
**அவணது அறியுளர் யார்என, உமணர்**
**கீழ்மரத்து யாத்த சேமஅச்சு அன்ன**
**இசை விளங்கு கவிதை நெடியோய் !திங்கள்**
**நாள்நிறை மதியத்து அனையை இருள்**
**யாவணதோ நின்நிழல் வாழ்வோர்க்கே .புறம்)102)**

“கீழ் மரத்து யாத்த சேம அச்சு அன்ன” என உவமையைக் கையாள்கிறார்ஊர்திச் . .சிந்தித்துள்ளனர் சக்கரங்களில் ஏதும் பழுது ஏற்பட்டால் பயணம் நிற்காமல் தொடர்வது பற்றிச் இத்தகைய சேம அச்சினை வண்டிகளில் பயன்படுத்தியுள்ளனர்இந்த சேம அச்சு போன்றே . மக்களுக்கு இடர் வரும் பொழுது அதனைக் களையும் சேம அச்சாக மன்னன் விளங்குகிறான் என .இப்பாடல் அடி கூறுகிறது

**காற்றில்லா மண்டலம்**

அண்மைக்கால அறிவியலின் வளர்ச்சியாகக் காற்றில்லா மண்டிலத்தைக் கண்டறிந்தது குறித்து உலகம் மகிழ்கிறதுஆனால் ., உண்மையில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே விண்வெளியில் காற்று இல்லாத பகுதி உள்ளதை நம் தமிழ் முன்னோர் நன்கு அறிந்துள்ளனர் என்பது அவர்களின் அறிவியல் முன்னோடித் திறன் நமக்குத் தெரிய வருகிறது.

**நளிஇரு முந்நீர் ஏணி யாக**
**வளியிடை வழங்கா வானம் சூடிய**
**மண்திணி கிடக்கைத் தண்தமிழ்க்**
**கிழவர் .புறம்)35)**

எனும் பாடலில்,

வரி விதிப்பை நீக்குவதற்கு அறிவுரை கூறும் புலவர், பழந்தமிழ்நாட்டு எல்லையையும், மூவேந்தர் சிறப்பையும் குறிப்பிடும் வகையில், கடல்களால் சூழப்பெற்று, காற்று வழங்காத

வானத்தின் கீழ் உள்ள நிலத்தை ஆளும் மூவேந்தர் என்கிறார் வெள்ளைக்குடி நாகனார் எனும் புலவர்.

மற்றொரு புலவர், இடம் விட்டு இடம் பெயரும் காற்று இல்லாத வானம் என்பதை,

**மயங்குஇருங் கருவிய விசும்புமுக னாக**

**இயங்கிய இருசுடர் கண்எனப் பெயரிய**
**வளியிடைய வழங்கா வழக்கரு நீத்தம்**

**. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . (புறம்.365)**

நில மண்டிலமும், நீர் மண்டிலமும், தீ மண்டிலமும், வளி மண்டிலமும் கடந்து நிற்கும் விசும்பு நீத்தம் எனப்பட்டதுவழங்கா வழக்கரு நீத்தம் இதன்கண் வளி வழங்குதலின்மையின் வளியிடை . எனப்படுவதாயிற்று என உரைவேந்தர் ஔவை துரைசாமி அவர்களின் உரை கொண்டு புலவர் மார்க்கண்டேயனாரின் அடிகளின் அறிவியல் கருத்துக்களை உணரலாம்.

வளிமண்டிலம் சூழ இருப்பது ஞாலம் ஆதலின் அதனைக் கடந்து நிற்கும் விசும்பே நீத்தம் என்றார், என நீத்தம் என்பதற்கான விளக்கத்தையும் அளிக்கிறார் காற்று இல்லாத .பகுதியை விசும்பு என அழைத்துள்ளனர் என்பதையும் காற்று நீங்கி இருத்தலால் நீத்தம் எனப் பெயர் பெற்றது என்பதையும் அறியலாம்.

விண்ணறிவியலிலும் காற்றறிவியலிலும் சிறந்திருந்த தமிழ் முன்னோர், உயரச் செல்லச் செல்லக் காற்றின் தன்மை குறைந்து செல்வதை உணர்ந்திருந்தனர்இ .தனைப் புறநானூற்றின் மற்றொரு பாடலில் காணலாம்.

“வளிவழங்குதிசை” எனக் காற்று வழங்கும் திசை பற்றிக் குறிப்பிடுகிறார் புலவர் குறுங்கோழியூர்க்கிழார்.

புலவர் மாங்குடி மருதனார், கப்பலை இயக்கும் ஆற்றலைக் காற்று பெற்றிருந்ததை,

**நளி கடல் இருங் குட்டத்து**

**வளி புடைத்த கலம் போல**

**களிறு சென்று கறன் அகற்றவும்**

**. . . . . . . . . . . . . . . . . . . . . . (புறம்.26)**

எனும் உவமையில் குறிப்பிடுகின்றார்.

காற்று புயலாக மிகும் பொழுது அதன் வலியைத் தடுக்க இயலாது எனக் குறிப்பிடும் பாடலும் உண்டு புலவர் மதுரை மருத .இளநாகனார்,

**கடுவளி தொகுப்ப ஈண்டி**

**வடுஆழ் எக்கர் மணலினும் பலவே .புறம்)55)**

என மணலினும் பலவாக வாழுமாறு வாழ்த்தும் பொழுது, காற்று மணலைக் கொண்டு வந்து கொட்டும் அளவு வலிமையாகக் கடற்காற்று வீசுவதைக் குறிப்பிடுகின்றார்.

வெண்ணிக் குயத்தியார், வளிதொழில் ஆண்ட உரவோன் மருக) !66) என்ற அடிகள் மூலம் மன்னனை வாழ்த்துகிறார்இதில் காற்றின் இயல்பையும் இயக்கத்தையும் அறிந்து ., ஆளுமை பெற்ற

மரபில் வந்த மன்னர் எனக் குறிப்பிடுகிறார்.

வரைவளி .புறம்)133) என மலைக்காற்று பற்றிக் குறிப்பிடுகின்றார் புலவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்.

புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர் விண்ணில் உழலும் காற்றையும் தீயைப் பற்றிப் பரவச் செய்யும் அதன் ஆற்றலையும்,

**விசும்பு தைவரு வளியும்**

**வளித் தலைஇய தீயும் (புறம்.4)**

எனும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

புலவர் கழாத் தலையார்,

**வளிவழக் கறுத்த வங்கம் போல .புறம்)368)**

என்னும் உவமையில் கடற்பகுதியில் காற்று இயங்கா நிலை உள்ளதையும் குறிப்பிடுகின்றார்.

புலவர் கோவூர் கிழார், காற்று நெருப்புடன் இணைந்து அழிக்கும் ஆற்றலைக்,

**காற்றோடு எரிநிகழ்ந் தன்ன செலவின் .புறம்)41)**

என்னும் அடிகளில் பாடுகிறார்.

கடலாழமும், நிலப்பரப்பும், காற்றியங்கு திசையம், விரிந்த வானமும், செஞ்ஞாயிற்றின் வெம்மையும் ஆகிய விண்ணியல் செய்திகளைப் புறநானூற்றில் அறியலாம்.

**இரு முந்நீர்க் குட்டமும்**

**வியன் ஞாலத்து அகலமும்**

**வளி வழங்கு திசையும்**

**வறிதுநிலைஇய காயமும்**

**செஞ் ஞாயிற்றுத் தெறல் (புறம்.20)**

எனும் பாடல் வழி தன் காலத்திய அறிவியல் சார்ந்த செய்திகளைத் தருகிறார்.

சோழன் நலங்கிள்ளி ஆட்சியில் வானின்கண் செலுத்துபவன் இல்லாது தானே இயங்கும் வானவூர்தியில் அன்று சென்றனர் என்று உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்ற புலவர் பாடல் எழுதியுள்ளார்.

**. . . . . . . விசும்பின்**

**வலவன் ஏவா வான ஊர்தி எய்துப என்ப. (புறம்.27)**

இவற்றால் காற்றறிவியல் பழந்தமிழர் நன்கு அறிந்த ஒன்று என்பது தெளிவாகிறது.

எல்லா அறிவியலும் மேனாட்டிற்குரியனவே என்னும் அறியாமை நீங்கி நடுநிலையுடன் ஆராய்ந்தால் பன்னெடுங்காலத்திற்கு முன்பே நம் தமிழர் அறிவியல் வளத்தில் சிறந்திருந்ததை உணரலாம்.

**முடிவுரை**

சங்க இலக்கியங்களில் இலக்கியம் மட்டும் தான் உள்ளது என்று கூறமுடியாதுஅவற்றில் . இலக்கியக் கண்கொண்டு பார்ப்பினும் இவற்றை .அறிவியல் சார்ந்த விடயங்களும் நிறைந்துள்ளன அறிவியல் கண்கொண்டு பார்ப்போமானால் தமிழ் இலக்கியங்களில் உள்ள அறிவியல் கோட்பாடுகள் வெளிப்படும்.

**துணைநூற் பட்டியல்**


1. இராசமாணிக்கனார், மா. *தமிழக ஆட்சி,* மெட்ரோபாலிடன் பிரிண்டர்ஸ், சென்னை, 1972.
2. குழந்தைசாமி, வா.செ. *அறிவியல் தமிழ்,* பாரதி புத்தகப்பண்ணை, சென்னை, 1985.
3. சிவத்தம்பி, கா. *பண்டைத் தமிழ்ச் சமூகம்,* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட் (பி), சென்னை, 2003.
4. சுப்பிரமணியன், சி. *சங்க இலக்கியம் சில பார்வைகள்*, பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 2013.
5. பிள்ளை, கே.கே. *தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்,* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை .2002.
6. புறநானூறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, 2004.